கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்: திரு. வெ. அன்புச்செல்வன், இ.ஆ.ப.,

ந.க.எண். 704 /2020 /பேரூ2 நாள். 30.05.2020

8/6/2020

பொருள்: பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – கடலூர் மாவட்டம் – பேரூராட்சிகளில் பணிபுரிந்து வரும் இளநிலை உதவியாளர்கள் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய 2015–2016, 2016–2017, 2017–2018 ஆம் ஆண்டுகளுக்கான தொகுதி IV–ல் அடங்கிய நேரடி போட்டி தேர்வில் இளநிலை உதவியாளராக தெரிவு செய்யப்பட்டது – கடலூர் மாவட்டப் பேரூராட்சிகள் அலகில் பணி நியமனம் செய்யப்பட்டது – இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை :
1) அரசாணை எண். 271, ஊரக வளர்ச்சித் துறை, நாள். 04.04.1990.
2) சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலர் அவர்களின் குறிப்பாணை எண்.3055/PSD-C3/2018, நாள். 28.11.2018.
3) சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலர் அவர்களின் கடித ந.க.எண்.918/PSD-C3/2019, நாள். 13.02.2019.
4) கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 752/2017/ பேரூ2, நாள். 01.03.2019.
5) வடலூர் பேரூராட்சி செயல் அலுவலர் கடிதம் ந.க.எண். 146/2019/அ1, நாள். 05.03.2020.
6) பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலர் கடிதம் ந.க.எண்.26/2019/அ1, நாள். 05.03.2020.
7) தொடர்புடைய ஆவணங்கள்.

*****

ஆணை:

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய 2015–2016, 2016–2017, 2017–2018 ஆம் ஆண்டுகளுக்கான தொகுதி IV–ல் அடங்கிய நேரடி போட்டி தேர்வு மூலம் இளநிலை உதவியாளர் பணிக்கு தெரிவு செய்யப்பட்டு, பார்வை 3–ல் காணும் கடிதத்தின்படி கடலூர் மாவட்ட பேரூராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நபர்களுக்கு பார்வை 4–ல் காணும் கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின் வாயிலாக கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரப்படி கடலூர் மாவட்ட பேரூராட்சிகளில் காலியாக இருந்த இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணி நியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

அட்டவணை

| வ. எண். | தேர்வு செய்யப்பட்ட நபரின் பதிவு எண் / பெயர் / முகவரி (திருவாளர்கள்) | நியமனம் செய்யப்பட்ட பதவி மற்றும் பேரூராட்சி |
|---|---|---|
| 1 | 280125268<br>R. மகாதேவி,<br>4/973, திரௌபதி அம்மன் கோயில் தெரு, புதுகுப்பம் – திருமங்கலம் அஞ்சல், விழுப்புரம் தாலுக்கா, விழுப்புரம்–605501. | இளநிலை உதவியாளர்,<br>வடலூர் பேரூராட்சி |
| 2 | 030616053<br>M. ராதாகிருஷ்ணன்,<br>330B, சேலம் மெயின் ரோடு,<br>மேற்கு தெரு, அங்குசெட்டிபாளையம்,<br>பண்ருட்டி, கடலூர் மாவட்டம் – 607106. | இளநிலை உதவியாளர்,<br>பெண்ணாடம் பேரூராட்சி |

. . . 2

அதன்படி, மேற்காணும் அட்டவணையில் வரிசை எண்.1–ல் உள்ள திருமதி. R.மகாதேவி என்பவர் வடலூர் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக 12.03.2019 முற்பகலிலும், திரு. M. ராதாகிருஷ்ணன் என்பவர் பெண்ணாடம் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக 12.03.2019 பிற்பகலிலும் பணியில் இணைந்து நாளது தேதி வரை தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்கள்.

| வ. எண். | பெயர் / பதவி (திருவாளர்கள்) | பணி நியமன முறை | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | இரா. மகாதேவி, இளநிலை உதவியாளர், வடலூர் பேரூராட்சி, கடலூர் மாவட்டம். | TNPSC 2015–2016, 2016–2017, 2017–2018 | 12.03.2019 முற்பகல் | 12.03.2019 முற்பகல் |
| 2 | மா.இராதாகிருஷ்ணன், இளநிலை உதவியாளர், பெண்ணாடம் பேரூராட்சி, கடலூர் மாவட்டம். | TNPSC 2015–2016, 2016–2017, 2017–2018 | 12.03.2019 பிற்பகல் | 12.03.2019 பிற்பகல் |

மேற்காணும் அட்டவணையில் கண்டுள்ளவாறு தொடர்புடைய பணியாளர்கள் இளநிலை உதவியாளராக பணியில் இணைந்த நாள் முதல் தனியர்களது இளநிலை உதவியாளர் பணியினை கீழ்க்குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து (Service Regularization) ஆணையிடப்படுகிறது.

" The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Combined Civil Services Examination – IV for the year 2015-16, 2016-17 and 2017-2018 recruitment."

இரா இளமாறன் (signature)

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
கடலூர் மாவட்டம்.

6/4/2023

பெறுநர்

தொடர்புடைய பணியாளர்கள் (செயல் அலுவலர் வழியாக)

நகல்: செயல் அலுவலர், வடலூர் / பெண்ணாடம் பேரூராட்சி, கடலூர் மாவட்டம்.
நகல்: பேரூராட்சிகளின் இயக்குநர், நகர் நிர்வாக அலுவலக வளாகம், 7 மற்றும் 8 வது தளம், 75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.